முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 25.11.2025, அ.வ.எண்.229/2020, வா.சா.2. கோவர்த்தனன், த/பெ.ரவிச்சந்திரன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்குச் சொத்தில் நான் சிறுவயது முதல் இருந்து வருவதற்கு ஆதரவாக அடையாள அட்டை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குச் சொத்து எனது தகப்பனாரின் தாத்தா பாப்பநாயக்கருக்கு கடந்த 1934 ம் ஆண்டு பத்திரப்படி பாத்தியம் என்று கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல, தாவா சொத்தை பாப்ப நாயக்கர் கடந்த 1942 ம் ஆண்டு ஒரு கெங்கம்மாள் என்பவரிடமிருந்து வாங்கினார் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் கடந்த 1958 ம் ஆண்டு பத்திரப்படி எனது தாத்தா கோவிந்தராஜ் அனுபவித்து வந்ததாக கூறியுள்ள நிலையில் மேற்படி பத்திரத்திலோ அல்லது நான் சொல்கின்ற கடந்த 1934 ம் ஆண்டு பத்திரத்திலோ சொல்லப்பட்டுள்ள 2 வது அயிட்ட சொத்துகளும் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள 2 வது அயிட்ட சொத்துக்களும் வேறு வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல, அனைத்தும் ஒரே சொத்துக்கள் ஆகும்.

2) நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும் முதல் சாட்சியான எனது தகப்பனார் மேற்படி சங்கதிகளை அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. கடந்த 2020 ம் ஆண்டுமாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் எனது அப்பா தாக்கல் செய்துள்ள நீதிப்பேராணை வழக்கில் தாசில்தார் விசாரணையில் 2 வது அயிட்ட சொத்துக்கள் நத்தம் புறம்போக்கு என்று அறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அந்த சொத்து நத்தம் புறம்போக்கு கிடையாது.

ஒப்பம்/- (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

3) 2 வது அயிட்ட சொத்துக்கள் 1958 ம் ஆண்டுபத்திரம் வரை உள்ள எந்த ஆவணங்களிலும் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல., 1934, 1958, 2005 ம் ஆண்டு பத்திரங்களில் எவ்வித வித்தியாசமும் இன்றி இடம்பெற்றுள்ளது. மேற்படி விவரங்களை எனது தகப்பனார் அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்திருந்தால் அது தவறு என்றால் அவர் என்ன அடிப்படையில் கூறினார் என்று எனக்கு தெரியாது,. நான் எந்த பத்திரத்தையும் படிக்காமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு தென்புறமாக கிழமேல் வீதி உள்ளது என்றால் கிழமேல் வீதி அல்ல பாதை உள்ளது. அதில் இரு சக்கர வாகனங்கள் இரண்டு செல்லமுடியாத அளவிற்கான பாதை ஆகும்.

4) தாவா 2 வது அயிட்ட சொத்திற்கு வடபுறமாக பிரதிவாதிகளின் மாட்டு கொட்டகை, புறவடை உள்ளது என்றால் சரிதான். அந்த மதில்சுவரில் தெற்கு பார்த்து ஒரு கதவு பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 வது அயிட்ட சொத்தின் வழியாகத்தான் அந்த கதவிற்கு செல்லமுடியும் என்றால் சரியல்ல. இதுநாள் வரை யாரும் அந்த வழியில் சென்றது கிடையாது. நான் சொல்லும் தெற்கு, கிழக்கு, மேற்கு வழியாக மேற்படி புறவடைக்கு செல்லமுடியாது என்றால் செல்லமுடியும். அதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5) எனது தகப்பனார் வழக்குச் சொத்துக்கு சம்மந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மூலம் எந்த வழக்குமூலமும் தாவாவிற்கு எழவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணங்களிலும் 2 வது அயிட்ட சொத்து இடம் பெறாததால் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) தாவா சொத்து காலியிடத்தில் எனது திருமணத்தின் போது தான் பந்தல் போட்டோம் என்றால் சரியல்ல. 36 வருடமாகவே பந்தல் உள்ளது. எனது தகப்பனாரும், நானும் சேர்ந்து பொது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து பொது மக்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் தான் தாசில்தார் தன்னுடைய அறிக்கையில் மேற்படி இடத்தை நத்தம் காலியிடம் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அதனால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.